யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 13 திங்கட்கிழமை (26-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 149

# அரச பிரமுகர்களின் வீடுகள் மீது தாக்கு!

## கொழும்பு நகரில் தொடர்ந்து பதற்றம்

கொழும்பு, ஏப்ரல் 26

லலித் அத்துலத் முதலி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு கொழும்பில் அரசதரப்பு பிரமுகர்கள் பலரின் வீடுகள் இனந்தெரியாத குழுக்களின் தாக்குதலுக்கு இலக்காகின தலைநகர் கொழும்பில் தொடர்ந்தும் பதற்றநிலை நிலவி வருகிறது.

கொழும்பில் அரசுக்கும், அரச தரப்பினருக்கும் எதிரான வன்முறைகள் அதிகரித்திருப்பதை அடுத்து அங்கு வீதிகளில் பொலீஸ், இராணுவ ரோந்து அதிகரிக்கப்பட்டிருக்கிறது; படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்; அரச கட்டடங்களுக்கு முன்னர் பெருமளவில் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளன.

## புலிகளுக்கு சம்பந்தமில்லை; லண்டனில் அறிக்கை

''முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் கொலைக்கும் எமக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லை''

விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமையகம் நேற்று இவ்வாறு அறிவித்தது.

லலித் அத்துலத் முதலி அவரது அரசியல் எதிரியாலேயே படுகொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது மக்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

அத்துலத் முதலியின் படுகொலைக்கு அரசே முழுக் காரணம்.''

— இவ்வாறு விடுதலைப் புலிகள் லண்டனில் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லலித்தின் கொலையை விடுதலைப் புலிகள் தான் செய்தனர் என்ற ஸ்ரீலங்கா அரசின் குற்றச்சாட்டையும் புலிகள் திட்ட வட்டமாக மறுத்துள்ளனர். (ஒ-த-5-6)

## புலிகள் மீது பழியை போட்டு தப்ப முயல்கிறது அரசு!

லலித் கொலையுண்டமைக்கு விடுதலைப் புலிகள் மீது பொறுப்பைச் சுமத்தி, கொலையை மூடி மறைக்க அரசு முயற்சி செய்து வருவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஏனைய எதிர்க் கட்சிகளும் குற்றம் சுமத்தியுள்ளன.

இதற்கிடையில் —

விடுதலைப் புலிகளின் அதிரடிப்படை ஒன்று கொழும்புக்கு வந்திருப்பதாக பாதுகாப்பு அமைச்சு கடந்த வாரத்தில் வெளியிட்ட எச்சரிக்கையை நினைவு படுத்தும் செய்திகளை அரசுக்குச் சொந்தமான வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவம் கொடுத்து பகிரங்கப்படுத்தி வருகின்றன.

## மனிதரைக் கொலை செய்யும் கட்சியல்லவாம் ஐ.தே.க.!

''மனிதர்களைப் படுகொலை செய்வது தமது கட்சியின் நம்பிக்கை அல்ல!''

—இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸா கூறியுள்ளார்.

லலித் அத்துலத் முதலி கொலையுண்ட பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்ற தனது கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்படும் போது எல்லாம் தமது கட்சி மீதே குற்றம் சுமத்தப் படுவதாகவும் அவர் நொந்து கொண்டார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

ஆகக்குறைந்தது பிராணிகள் கொலை செய்யப்படுவதைக் கூட தனது கட்சி விரும்பாது என்றார் அவர்.

## "ரூபவாஹினி" அதிகாரிகள் நையப்புடைக்கப்பட்டனர்

கொழும்பு, ஏப் 26

படுகொலையுண்ட லலித் அத்துலத் முதலியின் சடலம் ''எம்பாம்'' செய்யப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட போது கூடச் சென்ற ''ரூபவாஹினி'' அதிகாரிகள் குழு மக்களினால் நையப்புடைக்கப்பட்டனர்.

லலித்தின் சடலம் மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அப்போது கூடச் சென்ற மக்கள் அரச விரோத கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். (உ)

லலித்தைச் சுட்டுக் கொன்றது யார்?

## பலியான தமிழ் இளைஞர் பற்றி முரண்பாடான தகவல்கள்

லலித் அத்துலத் முதலியை சுட்டுக் கொன்றதாகக் கூறப்படும் தமிழ் இளைஞர் குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு கிருலப்பனையில் வைத்து அத்துலத் முதலி கொலை செய்யப்பட்ட பின்னர் அந்த இடத்திலிருந்து சுமார் அறுநூறு யார் தூரத்துக்கு அப்பால்— கிருலப்பனை முகலம் வீதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக்கடையின் பாதையின் முடிவில் — வீதியோரத்தில் மேற்படி தமிழ் இளைஞனின் சடலம் அடுத்த நாள் நண்பகலில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சடலம் கொக்குவிலைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணனுடையது என்று அடையாளம் காணப்பட்டதாக நேற்று முன்தினம் அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது

அந்த இளைஞரின் சடலத்தில் இருந்து, ரிவோல்வர் ஒன்றும், இரண்டு மகஸின்களும், கைக்குண்டு ஒன்றும் காணப்பட்டதாகவும் —

லலித் அத்துலத்முதலியின் மெய்ப்பாதுகாவலர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோ

(2 ஆம் பக்கம் பார்க்க)

லலித் கொலை பற்றிய மேலும் செய்திகள் 2 ஆம் பக்கத்தில்

## ஷெல்லினால் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப் 26

கட்டுவன், தெல்லிப்பளை, அளவெட்டி ஆகிய பகுதிகளில நிலை கொண்டுள்ள படையினர் நேற்று பரவலாக ஷெல் தாக்குதலை நடத்தினர்.

அளவெட்டி காளி கோவிலடியில் விழுந்து வெடித்த ஓர் ஷெல்லினால் இருவர் காயமடைந்தனர். (உ-5)

## தேர்தலை ஒத்திவைக்க போதிய காரணமில்லை

அத்துலத் முதலி கொல்லப்பட்டது மாகாணசபைத் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு ஒரு காரணமாகமாட்டாது.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

இக்கொலையை ஒரு காரணமாகக் காட்டி மகாண சபைத் தேர்தலை அரசு ஒத்திப்போடக் கூடும் என்று எதிர்க் கட்சிகள் தெரிவித்த கவலையைத் தொடர்ந்தே தேர்தல் ஆணையாளர் இவ்வாறு கூறினார்.

கட்சிகளின் தலைவர்களுக்கு கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கும் பொலீஸார் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார். (உ-எ)

## மட்டக்களப்பில் 4 படையினர் புலிகளின் தாக்குதலில் பலி!

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா காவல் படையினர் மீது நேற்றுக் காலை 7.45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய மின்வேக அதிரடித் தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பில் உள்ள பிள்ளையாரடி என்னும் இடத்தில் அமைந்துள்ள காவல் படை நிலையத்தில் இருந்து வெலிகந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஐந்து படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு நிமிட நேரம் மட்டும் நீடித்த இந்த அதிரடித்தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலித் தடையை நீக்க தூதுவர்கள் பலர் அழுத்தம்

கொழும்பு, ஏப் 26

யாழ்ப்பாணக் குடாநாட்டு பொது மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தி வரும் கிளாலிக் கடற்பாதை மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு, கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அரசாங்க உயர்மட்டத்துக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாக மிக நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

மக்களுக்கு வேறு எந்தப் பாதையும் இல்லாத கட்டத்தில் அவர்கள் கிளாலிப் பாதையை பாவிக்கிறார்கள். அதனைத் தடை செய்திருப்பது மனித உரிமை மீறல் நடவடிக்கை என்று வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலரும், தொண்டர் நிறுவனங்களில் பிரதிநிதிகளும் அரசிடம் திட்டவட்டமாக சுட்டிக்காட்டப்பட்டதாக அறிய வந்தது.

வெளிநாட்டுத் தூதுவர்களின் வற்புறுத்தலைத் தொடர்ந்து கிளாலிப் பாதை

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதி பேண கோருகிறார் லலித்தின் துணைவியார்

கொழும்பு, ஏப். 26

தற்போதைய பதற்ற சூழ்நிலையில் அமைதி காக்கும்படி லலித் அத்துலத் முதலியின் மனைவியாரான திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

லலித் அத்துலத்முதலி உயிருடன் இருந்தால் இத்தகைய சூழ்நிலையில் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் நாம் இருப்பதையே எங்களிடம் இருந்து அவர் எதிர்பார்த்திருப்பார். அமைதி பேணுவதே நாம் அவருக்குச் செய்யக் கூடிய அதியுயர் மரியாதையாகும்.

—இவ்வாறு திருமதி அத்துலத் முதலி மேலும் குறிப்பிட்டார். (உ-எ-6)

## மக்கள் திரண்டு அஞ்சலி

கொழும்பு, ஏப். 26

கொலையுண்ட லலித் அத்துலத் முதலிக்கு தென்பகுதியில் பரவலாக அஞ்சலி செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களிலும் மக்கள் கறுப்பு, வெள்ளைக் கொடிகளைக் கட்டி தமது அஞ்சலியைத் தெரிவித்துள்ளனர்.

லலித்தின் பூதவுடலுக்கு இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக மக்கள் வெள்ளம் கொழும்பை நோக்கி திரண்டு வந்தபடி உள்ளது என்றும் —

லலித்தின் வீட்டுக்கு முன்னால் பெரும் எண்ணிக்கையானவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக 'கியூ'வில் காத்து நிற்கின்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## ஸ்கொட்லாந்து குழுவினர் இன்று கொழும்பு வருகை

கொழும்பு, ஏப். 26

லலித் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி பொலிஸாருக்கு உதவுவதற்காக ஸ்கொட்லாந்து பொலிஸ் குழு இன்று காலை கொழும்பு வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வு அதிகாரி ஒருவர், சட்டமருத்துவ அதிகாரி ஒருவர் உட்பட நான்கு பேர் இந்தக் குழுவில் இடம்பெறுள்ளனர்.

இதற்கிடையில் —

லலித் கொலைச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த இரண்டு பொலிஸ் குழுக்களை பொலிஸ் மா அதிபர் நியமித்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## முதலாவது சந்தேக நபர் ஜனாதிபதி பிரேமதாதான்!

### வாசுதேவ கூறுகிறார்

லலித் கொலை தொடர்பான முதலாவது சந்தேக நபர் ஜனாதிபதி பிரேமதாஸாவே

இவ்வாறு கூறினார் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார.

பிலிப்பீன்ஸில் அப்போதைய ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸினால் எதிரணித் தலைவர் அக்கினோ கொல்லப்பட்டது இப்போது நினைவுக்கு வருகிறது.

இப்போது சந்தேகநபரான பிரேமதாஸாவை பதவி விலகும்படி வற்புறுத்தி மாபெரும் வெகுஜனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும் - இப்படி அவர் மேலும் சொன்னார்.

(உ-6)

**ST. PATRICK's COLLEGE**

The school will reopen for the Trinity Term on Wednesday, 28 April.

Rector

(C/5049)

**இன்று மாலை**

கவின் கலைகள் பயிலகம்
SCHOOL OF FINE ARTS
வழங்கும்

இசைக் கலைமணி
செல்வி ந. கேமா யூலியற் அவர்களின்

**வீணைக் கச்சேரி**

26 - 4 - 1993 (திங்கள்) மாலை 6.45 மணி

— திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

பிரவேசம் இலவசம்

(சி-5050)

## கைலாச பிள்ளையார் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப் 26

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலயத்தில் விநாயகருக்குரிய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் மே 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி சித்ரா பூரணையன்று தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (அ)

## பருத்தித்துறை இறங்குதுறை திருத்தப்படும்

மந்திகை, ஏப் 26

சேதமடைந்த நிலையிலுள்ள பருத்தித்துறை இறங்குதுறை விரைவில் திருத்தப்படவுள்ளது

திருத்த வேலைகளுக்கான 50 பக்கற் சிமெந்து 'வாதுவ' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டது. (ஒ-87)

## அதிபர்கள் கூட்டம்

சொத்தணி அதிபர்கள் மற்றும் அதிபர்களுக்கான கலந்துரையாடல்கள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

பண்டத்தரிப்புக் கோட்டம்:- இன்று பிற்பகல் 3 மணிக்கு — மானிப்பாய் இந்துவில்.

தென்மராட்சிக் கோட்டம்:- நாளை காலை 9 30 மணிக்கு — டிறிபேர்க் கல்லூரியில்.

வடமராட்சிக் கோட்டம்:- நாளை பிற்பகல் 2 மணிக்கு — வேலாயுதம் ம. வி. யில்.

அப்பியாசக் கொப்பி விநியோகம், பாடசாலைகளில் சொத்து விவரம், உணவு முத்திரை, மேதினம் ஆகிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## முடிவுகளை பார்வையிடலாம்

பட்டதாரி பயிலுநர்களை நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களாக நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளை நல்லூரிலுள்ள தமது தலைமையகத்தில் பார்வையிடலாம் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சு போட்டிப் பரீட்சை முடிவுகளை அனுப்பி வைத்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தமது முடிவுகளைப் பார்வையிட்டு, தமது பதவியை நிரந்தரமாக்குவதற்காக — கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஊடாக மாகாண அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## தந்தை செல்வா அமரதினம்

யாழ்ப்பாணம், ஏப் 26

தந்தை செல்வநாயகத்தின் பதினேழாவது அமர தினத்தை ஒட்டி இன்று காலை அவரது நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தப்படும்.

நினைவாலயப் பகுதி யாழ். மாநகர சபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டு சுத்தமாகக் காட்சி தருகிறது.

இன்றைய மலரஞ்சலி நிகழ்ச்சியில் பொதுமக்கள், பிரமுகர்கள் பலரும் பங்குபற்ற உள்ளனர்.

இதேவேளை—

தந்தை செல்வா அமர தினத்தை முன்னிட்டு வெரித்தாஸ் வானொலி இன்று இரவு தனது தமிழ்ச் சேவையில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்புகிறது.

## பலியான தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் இவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் நேற்று முன்தினம் முதலில் அறிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர் குறித்தே இப்போது முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

### அரச தரப்பு அறிவிப்பு

லலித்தைக் கொன்றவர் இந்த இளைஞரேஎன்று திட்டவட்டமாக உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும்—

அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் அரச சார்பு வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அறிவித்து வருகின்றன.

லலித்தைக் கொன்றவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் தான் என்பதைக் காட்டுவதில் அரச சார்புவானொலி மற்றும் டெலிவிஷன், பத்திரிகைகள் அதிக சிரத்தை காட்டி வருகின்றன.

பொதுக் கூட்டத்தில் வைத்து அத்துலத் முதலி சுடப்பட்ட போது அந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஏ. ஜே. பிரேமதாஸா என்பவர், லலித்தைச் சுட்டவர் மேற்படி தமிழ் இளைஞர் தான் என அடையாளம் காட்டியிருப்பதாக அரசு சார்பு வெகுஜன தொடர்பு சாதனங்கள் அறிவித்தன.

லலித்தின் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளரான பிரேமதாஸ, அத்துலத் முதலியைச் சுட்டவரின் முகவெட்டு, அணிந்திருந்த ஆடை ஆகியவற்றைக் கொண்டு தாம் அந்த நபரை அடையாளம் கண்டதாகத் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

மேற்படி தமிழ் இளைஞரின் சடலம் காணப்பட்ட இடத்தில் சமுகமளித்து இருந்த பொலிஸ் அதிகாரிகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மத்தியில் பேசிய பிரேமதாஸ, தமது தலைவரைச் சுட்டுக் கொன்றவர் அந்த இளைஞர் தான் எனத் தாம் உறுதியாக நம்புவதாகக் கூறினார் என்றும் அறிவிக்கப்பட்டது.

முதலாவதாக தீர்க்கப்பட்ட துப்பாக்கிச் சூடு மேடையில் வைக்கப்பட்டிருந்த குளிர்பான போத்தலைத் தாக்கியதாகவும் இரண்டாவது வேட்டு அத்துலத் முதலியைத் தாக்கியதாகவும் அவர் குறிப்பிட்டார் என்றும் —

வீதி வெளிச்சம், மேடை வெளிச்சம் ஆகியவற்றில் இருந்து கொலை செய்தவரின் முகம் தமக்கு நன்றாகத் தெரிந்திருந்தது என அவர் சொன்னார் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

### காமினி மறுப்பு

ஆனால் மேற்படி செய்திகளை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சிரேஷ்ட தலைவரான காமினி திஸநாயக்கா முற்றாக மறுத்திருக்கிறார்.

கண்டெடுக்கப்பட்ட சடலம் அத்துலத் முதலியைக் கொன்றவரினுடையதா என்பது தமக்குத் தெரியாது என தமது கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளரான ஏ. ஜே. பிரேமதாஸா சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாக காமினி திஸநாயக்கா அறிவித்திருக்கிறார்.

பி.பி.ஸி. யின் சிங்கள சேவைக்கு ஏ. ஜே. பிரேமதாஸா அளித்த பேட்டியில் லலித்தைக் சுட்டவர் வெள்ளை நிற "சேட்" அணிந்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் முகலம் வீதியில் காணப்பட்ட இளைஞரின் சடலத்தில் நீல நிற "ரி-சேட்" காணப்பட்டது.

### இளைஞரின் சடலம் எப்போது வந்தது?

லலித் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பின்னரும் வெள்ளியன்று பின்னிரவில் மேற்படி முகலம் வீதிப் பகுதியில் சடலம் எதுவும் காணப்படவில்லை என பொதுமக்கள் குறிப்பிட்டதாக காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் நள்ளிரவு 12 மணி வரை அப்பகுதியில் சடலம் காணப்படவில்லை என்றும்—

லலித்தைக் கொன்றவர்களே மேற்படி இளைஞரையும் கொன்று, பின்னர் அவரின் சடலத்தை முப்லம் வீதிப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றிருப்பர் என அனுமானிக்க முடியும் என்றும் 'சிலுமின'' பத்திரிகை தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாடான அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆதலால் தமது அடையாளத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களை பகிரங்கமாக விட்டுவிட்டு சயனைட் உட்கொண்டிருப்பார்கள் என்று கூறுவது துர்லபமே என ''சிலுமின'' மேலும் தெரிவித்தது.

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொலையின் போதும் ஏனைய எல்லாம் எரிந்து போக அடையாள அட்டை மட்டும் அப்படியே காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டதையும் ''சிலுமின'' சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துலத் மூதலியின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் தீர்த்த வேட்டுக்களுக்கே மேற்படி இளைஞர், இலக்காகி உயிரிழந்தார் என்று பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட்பெரேரா தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

சூட்டுக்காயங்கள் இளைஞரின் சடலத்தில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மேற்படி இளைஞரின் வாயில் இருந்து நுரை தள்ளியதாகவும்—

புலிகள் செய்வது போன்று சயனைட் உட்கொண்டு இந்த இளைஞர் தற்கொலை செய்திருப்பதாகவும் வேறு பொலீஸ் வட்டாரங்கள் வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்குத் தெரிவித்தன.

அந்த இளைஞர் சயனைட் உட்கொண்டு மரணமடைந்தார் என்பதை, பிரேத பரிசோதனை நடத்திய சட்ட மருத்துவ அதிகாரி உறுதிப்படுத்தினார் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

## ஒத்திவைப்பு

லலித் அத்துலத் முதலியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது மாகாணசபை தேர்தல் பிரசாரங்களை மூன்று நாளுக்கு ஒத்திவைத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ)

## இளாலித்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீதான தடையை நீக்குவது குறித்து அரச உயர் அதிகாரிகள் மட்டத்தில் மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருதாகக் கூறப்படுகிறது.

இளாலிப் பாதை மீதான தடையை நீக்கும் அறிவித்தல் விரைவில் வரலாம் என்றும் அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இளாலித் தடை நீக்கப்பட வேண்டும் என்று தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் அண்மையில் அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து வற்புறுத்தினர் என்றும் தெரியவந்தது.

(அ-1-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த

# வலிகாமம் பாடசாலைகளை இயங்க வைக்க நடவடிக்கை

உடுவில், ஏப். 26

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்து சரிவர இயங்க முடியாமல் இருக்கும் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலையை இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இருந்து இப்பாடசாலைகளை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. துரைசிங்கம் எடுத்து வருகின்றார்.

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் வடக்கு ஆகிய பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த பாடசாலைகளை தற்போது நடைபெற்று வரும் பாடசாலைகளுடன் இசைவாக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை, மாதகல், இளவாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பாடசாலைகளை மானிப்பாய், மல்லாகம், உடுவில் ஆகிய பகுதிகளில் இயங்கி வரும் பாடசாலைகளுடன் இணைப்படுத்தி இயங்க வைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(ச-152)

## கனடாவில் ஈழத்தமிழர்கள் வன்செயல்: விசாரிக்க தனியான பொலீஸ் பிரிவு

கொழும்பு, ஏப். 26

கனடாவில் உள்ள ஈழத் தமிழர்களிடையே வன்செயல் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளை புலன் விசாரணை செய்ய கனேடிய பொலிஸ் தனிப் பிரிவு ஒன்றை அமைக்கவுள்ளது.

அண்மையில் ஸ்காபுரோ நகரில் ஈழத் தமிழ் குழுவினரிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் கனேடிய பொலீஸாரை உலுக்கி விட்டுள்ளதாகவும் —

அதனைத் தொடர்ந்தே இது விடயத்தில் தீவிர நடவடிக்கைகளை எடுக்க அவர்கள் தீர்மானித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது விடயம் தொடர்பாக கனேடிய பொலீஸ் அதிகாரி ஒருவர் அங்கு வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில் தெரிவித்திருப்பதாவது:-

அரசியல் பிரச்சினைகள் காரணமாக இங்கு வந்த தமிழர்கள் மீது பொதுவான அனுதாபமும் ஆதரவும் காட்டப்பட்டது. ஆனால் இப்போது நல்லவர்களோடு வேறுவகையானவர்களும் வந்து சேர்ந்துள்ளதை அறிய முடிகிறது.

கனடாவுக்கு வந்த வேறு சில இனக் குழுக்களிடையே குற்றச் செயல்கள் அதிகரித்த போது அவர்களுக்கென்று மட்டும் பொலீஸில் தனித் தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் குற்றச் செயல்கள் பெரிதும் குறைந்து விட்டன. இதே வகையில் தான் தமிழர்களுக்கெனவும் ஒரு விசேட பொலீஸ் பிரிவு அமைக்க இருக்கிறோம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.


**விஞ்ஞான கல்வி நிலையம்**

நல்லூர்

**O/L**

பகல் நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

வாரத்தில் 4 நாட்கள்

(சி-4949)


## செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம். ஏப். 26

1992 டிசம்பர் மாதம் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றி சங்கீத நடன செயன்முறைப் பரீட்சைகளுக்குத் தகுதிபெற்ற பரீட்சார்த்திகளுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்றும் நாளையும் காலை 8 - 30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

## பால்மாவுக்கான உணவுமுத்திரை

வலிகாமம் மேற்கு, ஏப். 26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குழந்தைகளுக்கான பால்மாவிற்கான உணவு முத்திரைகள் அந்தந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் மூலம் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

வறுமை நிவாரண உணவு முத்திரையுள்ள குடும்பங்களின் குழந்தைகளுக்கே பால்மாவிற்கான உணவு முத்திரைகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (த-175)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 26

முறைசாராக் கல்வி தொழில்திறன் பயிற்சிகளில் சேர்வதற்காக வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்திலும் -

வடமராட்சியில் நடைபெறவுள்ள பயிற்சிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 3ஆம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் நடைபெறும். (த)

# நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணக் குடா நாட்டில் நெருப்புக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

குழந்தைகள், சிறுவர்களே பெரும் எண்ணிக்கையில் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ள போதிலும் வயதானவர்களும் இந்நோயிலிருந்து தப்பவில்லை.

யாழ். போதனா வைத்திய சாலையில் வார்ட்டுகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் அதிகமானோர் நெருப்புக் காய்ச்சல் நோயாளராகவே இருக்கின்றனர். வெளிநோயாளர் பகுதியிலும் நாளாந்தம் நூற்றுக் கணக்கானோர் நெருப்புக் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

கோப்பாய், கைதடி, நாவற்குழி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் இருந்தே கூடுதலானோர் நெருப்புக் காய்ச்சல் நோய்க்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

அதிக வெப்பமும், நீர் நிலைகள் அசுத்தமடைந்திருப்பதுமே நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவுவதற்குக் காரணம் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

கொதிக்க வைத்து ஆறிய தண்ணீரைக் குடிப்பதும் உணவு வகைகளை சமைக்கும் போது சுத்தத்தைப் பேணுவது அவசியம் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.

(அ-15)

## அகதி முகாம் சுவர் இடிந்து 10 பேர் காயம்

யாழ்ப்பாணம் ஏப் 26

வவுனியாவில் நெலுக்குளம் பாடசாலையில் அமைந்துள்ள அகதிமுகாம் கட்டடச் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் அங்கு தங்கியிருந்த தமிழ் அகதிகளில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் நால்வர் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவர்.

## பரியோவான் கல்லூரியில் உலக சுற்றாடல் தின விழா

யாழ்ப்பாணம், ஏப். 26

உலக சுற்றாடல் தின விழா ஜூன் மாதம் 5ஆம் திகதி யாழ் பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதை ஒட்டி பாடசாலைகளுக்கிடையிலான சித்திரப் போட்டி, கட்டுரைப்போட்டி, உற்றுச் சோதிக்கும் வினா விடைப்போட்டி என்பன இடம்பெறவுள்ளன.

யாழ். பரியோவான் கல்லூரி மட்டத்தில் இவ்விழாவை ஒட்டி வீட்டுத் தோட்டப் போட்டி, தாவர வியற்பூங்கா புனருத்தாரணம், அலங்கார ஊர்தி உலா, மரம் நடுகை, நவீன உடையலங்காரப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன. [க]

## மே தினத்தில் ஒலிக்க இருப்பவை

- ★ உழைக்கும் மக்களே! எமது வாழ்விற்கே எமது போராட்டம்!
- ★ அனைத்து ஒடுக்கப்பட்டவர்களையும் அணைத்துச் செல்வோம்!
- ★ உழைப்பவர் கைகளில் அதிகாரம் ஏறிட தமிழீழமே பரிகாரம்.
- ★ ஆற்றல் மிக்க கைகளில் ஆயுதம்! ஏற்றிடுவோம் விடுதலைக் கனலை! போற்றிடுவோம் எமது தாயகத்தை!
- ★ உழைக்கும மக்களே! மாற்றத்திற்கான மாற்றுவழி ஏதுமில்லை! ஆற்றல் மிகு கரத்தில் எடு ஆயுதத்தை!

# நாயன்மாரின்திருமுறைகளைபடித்து பொது நோக்குடன் வாழ்வோம்

## திருமுறை விழாவில் மேலதிக அரச அதிபர்

தெல்லிப்பழை, ஏப். 26

''நாயன்மார்கள் அருளிய திருமுறைகள் இறைவனை மக்கள் அடைவதற்கு அரும் பெரும் வழிகாட்டிகளாகும். திருமுறைகளைப் படித்து பொது நோக்குடன் வாழ்வதே இறை அருளைப்பெறும் வழியாகும்.''

இணுவில் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற திருமுறைப் பெருவிழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கிய யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினி அம்மா திலகநாயகம் போல் இவ்வாறு கூறினார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில்—

''நாயன்மார்கள் மெய் உணர்வுடன் பாடி இறை அருளைப் பெற்றார்கள். அவர்கள் சொந்த நலனைக் கவனிக்கவில்லை இன்று சொந்த நலனுக்காக, பொருளாதார வசதிகளுக்காக மத மாற்றங்கள் நிகழ்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது'' என்று கூறினார்.

கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தமது தலைமை உரையில் பின்வருமாறு கூறினார்.

''இன்று நடைபெறும் திருமுறை விழாவால் இணுவில் ஒரு தெய்வ ஒளியைப் பெறுகிறது.

திருமுறைகள் எமக்கு உயிரானவை அவற்றை மெய் உணர்வுடன் ஓதும் வாய்கள் தான் மெய்யான வாய்கள் மற்றவை வெறும் வாய்கள்.

இன்று ''தமிழ், தமிழ்'' என்று ஒலி எழும்புகிறோம். ஆனால் தமிழிலே ஆக்கப்பட்ட திருமுறைகளை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.''

நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையில் ''இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் இன்னல்படும் மக்களுக்கு இந்த விழா மன நிம்மதியை அளிக்க உதவும்.

அன்று இறந்தவர்களுக்கு கிரியைகள் நடக்கும் போது தேவாரங்களைப் பாடினார்கள்.

இன்று துன்பங்கள் மத்தியில் இன்பங் காண திருமுறைத் தமிழ்ப் பாடல்களை பக்தி சிரத்தையுடன் பாட வேண்டும்

எமது பஞ்சம் போக்க, நோய் போக்க, நாட்டை வளமாக்க நாயன்மார்கள் வழிகாட்டியுள்ளார்கள்'' என்று கூறினார்

முதல் நாள் விழா ஆரம்பத்தில் திருமுறை தந்த திருத்தொண்டர்கள் நால்வரினதும் திருஉருவப்படங்களும், திருமுறை நூல்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன

திருமுறை விழா தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்றன.

[க-68]


உ

கல்வியங்காடு

**அருள் மிகு ஸ்ரீபத்திரகாளி உடனுறை வீரபத்திரசுவாமி கோவில்**

**மஹோற்சவ காலப் பேருரைகள்**

இன்று 26 — 04 — 1993 திங்கள் முதல்
05 — 05 — 1993 புதன் வரை
நேரம் இரவு 7-30 — 8-30 மணிவரை

பொருள்:

**பன்னிரு திருமுறைகள்**

நிகழ்த்துபவர்:
சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை)

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 26 — 04 — 93 | காலை 9-00 மணி |
| சப்பறத் திருவிழா | 03 — 05 — 93 | மாலை 6-00 மணி (புதிதாக அமைக்கப்பட்டது) |
| தேர் உற்சவம் | 04 — 05 — 93 | காலை 9-00 மணி |
| தீர்த்த உற்சவம் | 05 — 05 — 93 | காலை 9-00 மணி |

மஹோற்சவம் சிறப்புற வாழ்த்துபவர்கள்:
மணம், குணம் நிறைந்த இரட்டைப் புலிமார்க் பப்படத் தொழிற்சாலை உரிமையாளர்
திரு. ந. ஸ்ரீதரன் அவர்களும் தொழிற்சாலை ஊழியர்களும்.

(25402) புலவனார் வீதி, கல்வியங்காடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இன நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுகாதார முறைப்படி வறுத்துத் திரித்த தரமான சன் பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (25332)

**Olivetti English Typewriter** (சிறிய ரகம்) புதிய தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்குண்டு. ஒரு வருட காலத்திற்கு உத்தரவாதமும் இலவச சேவையும் வழங்கப்படும். எமது விற்பனை நிலையத்தில் நேரில் பார்வையிடலாம். கலக்சி புகைப்பட சேவை, 337/1, 1ஆவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4911)

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு வயது 50 நாட்கள். பூச்சி அகற்றப்பட்டவை. வரதன் சைக்கிள் கடை, அரசடி சந்தி, நவாலி தெற்கு
[25373]

யாவறலணை, நீளம் 11 அடி —> 14 பலகைகள், பாலை மரம், 6x2, நீளம் 9½ அடி —> 6 மரங்கள், பாலை மரம் 4x2, நீளம் 3 அடி —> 7 மரங்கள், பாலை மர வெட்டுத் துண்டுகள், தொடர்பு: 884, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி அருகில், திருநெல்வேலி தெற்கு.
(25392)

ஆட்டுக்கல், தேக்கு அலுவலக மேசை/ கட்டில் இரண்டு மெத்தைகளுடன், **Cake Mixer**, இறங்குப் பெட்டி, **Towel Racks**, தண்ணீர் தொட்டிகள், **Tools Set**, சகல வீட்டுப் பாவனைப் பொருள்கள், **Bridal Saree**, இல. 22 A, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி. (25401)

நல்ல நிலையில் உள்ள வேம்பு விற்பனைக்கு உண்டு. இல. 109 (277), கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்.
(25403)

### விற்பனையாகின்றது

லீலா சித்திரக்கலண்டர் புதிய லிதோ படங்களுடன் விற்பனையாகின்றது. மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(சி-4940)

### வீடு, காணி விற்பனைக்கு

அல்வாய் தெற்கு, குமிழடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கிணறு, வீட்டுடன் காணி மூன்று லாச்சம், 9½ குழியும், அருகில் வெற்றுக் காணி இரண்டு லாச்சம் பதினைந்து குழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. காசிப்பிள்ளை, துலாவை, அல்வாய் தெற்கு, அல்வாய்.
[25290]

### புலமைப் பரிசில் பரீட்சை

1992ஆம் ஆண்டு உட்பட 7 வருட வினா-விடை விற்பனையாகிறது. க. பொ. த. சாதாரண வினா விடையும், 1992 உட்பட சகல பாடங்களுக்கும் விற்பனையாகின்றது. அப்பியாசக்கொப்பிகள் மலிவாக விற்பனை செய்யப்படுகின்றன. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.
(சி-4946)

### வாடகைக்குத் தேவை

மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வசதியுடைய வீடு யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் ஒருகட்டை சுற்றாடலில் தேவை நல்ல வாடகை எதிர்பார்க்கலாம். சகலதும் உத்தரவாதமளிக்கப்படும். மு. ஹரன், இல. 322, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(25369)

### நெல்லிக்காய்

நாற்று விதைக்கு நன்கு முற்றிய நெல்லிக்காய் தேவை. மில்க்வைற்.
(சி-5042)

### DRESS MAKING

பிரத்தியேக தையல் பயிற்சி எல்லா வித முறையில் வெட்டித் தைப்பதற்கும், எம்பிரோய்டறி, பூச் செய்தல், நிற்றிங் லேஸ் பின்னுதல், வர்ணம் தீட்டுதல், கோலம் இன்னும் பல கைவினைப் பொருள்கள், ஐசிங் ஆகிய வகுப்புகளும் இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 28-04-93.
(5896)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 95** புதிய பிரிவு

தூய கணிதம்
பிரயோக கணிதம் } திரு. கமலசிங்கம்

ஆரம்பம்: 27 - 04 - 1993
செவ்வாய் 5.00 மணி

(சி-5026)

# அறிவித்தல்

## யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும்!

பாலர் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் தொடர்பாக ஆரம்பக் கூட்டம் பின்வரும் இடங்களில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள திகதிகளில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

| | நலன்புரிக் கூட்டுறவுச் சங்கப் பிரிவு | கூட்டம் நடைபெறும் திகதி | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01. | வடமராட்சி | 93—05—02 | தேவரையாளி இந்துக் கல்லூரி |
| 02. | வடமராட்சி கிழக்கு | 93—05—05 | நாகர் கோவில் அ. மி. கலவன் பாடசாலை |
| 03. | யாழ்ப்பாணம்-நல்லூர் | 93—05 05 | யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி-மண்டபம் |
| 04. | வலிகாமம் கிழக்கு-வலிகாமம் வடக்கு | 93—05 05 | யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம் |
| 05. | வலிகாமம் மேற்கு வலிகாமம் தென்மேற்கு வலிகாமம் தெற்கு | 93—05—05 | யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம் |
| 06. | தென்மராட்சி | 93—05 - 05 | நகர சபை, சாவகச்சேரி |

இம்மாவட்டத்தில் பல்வேறு நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்ற அனைத்துப் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் அனைவரையும், தத்தம் பிரிவில் நடைபெறும் இவ்வாரம்பக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1993-04-23.
(சி-5448)

# 31ஆவது நாள் நினைவு



தோற்றம்: 20 — 10 — 1917
மறைவு: 28 — 03 — 1993

## ஆரோக்கியநாதர் ஜேர்மெனம்மா

மிருசுவில், ஜேர்மெனம்மா ஆரோக்கியநாதர் ஆண்டவர் பதம் அடைந்த 31ஆவது நாள் 27 - 04 - 1993 காலை 7மணிக்கு அவவின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு அவவுக்காக மன்றாடும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவாக வேண்டுகிறோம்.

— குடும்பத்தினர்.

''சுசானா'',
மிருசுவில்.
(25343)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

## இராமுப்பிள்ளை பொன்னையா

எதிர்வரும் ஸ்ரீ முகவருடம் சித்திரைத் திங்கள் 14ஆம் நாள் 27 - 04 - 93 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அமரர் இராமுப்பிள்ளை பொன்னையா அவர்களின் நினைவஞ்சலியும், அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகளும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அவ் வைபவத்தில் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறும், மதிய உபசாரத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(25391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பலம் தந்தவை

மன்னார்த்தீவு இப்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது.

மன்னார்த்தீவில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் உடைத்து விடக் கூடிய சாத்தியம் இருப்பதாக படை அதிகாரிகள் உணர்கிறார்கள். மன்னார்த் தீவுக்குள் விடுதலைப் புலிகள் உட்புகுந்து தாக்குதல்கள் நடத்துவதைத் தடுக்க முடியவில்லை என்றும் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்!

இராணுவ அதிகாரிகள் கூறுவதை ஊர்ஜிதம் செய்வது போல, விடுதலைப் புலிகள் மன்னார்த்தீவிலும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பகுதிகளிலும் நாளாந்தம் ஏதோ ஓர் இடத்தில் அதிரடித் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பலம் அளவுக்கு விஞ்சி விட்டது. சனத்தொகையின் சராசரித் தேவையை விட மிகப்பல மடங்குகள் அதிகமானது. ஆயுத பலமும் அவ்வாறே.

அரசு தனது சகல வளங்களையும் பயன்படுத்தி தமிழர்களுடனான போராட்டத்தை— விடுதலைப் புலிகளுடனான போரை - வென்று விடும் நோக்குடன் தனது சக்திக்கும் அப்பாற்பட்டு படைகளுக்கு உதவி புரிந்து— பக்கபலமாக நின்று— ஊக்கமும் உற்சாகமும் உந்துதலும் அளித்து வருகிறது.

அவ்வாறிருந்தும் மூன்று வருடங்களாகப் புலிகளை வெல்ல முடியவில்லை தமிழர் போராட்டத்தை நசுக்க இயலவில்லை. தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் அரசின் எண்ணம் ஈடேற முடியவில்லை புதிய பிரதேசங்களை இராணுவம் பிடித்து விடாமல் தடுப்பது மட்டுமன்றி அது நிலை கொண்டுள்ள பகுதிகளுக்குள் உட்புகுந்து தாக்குதல் நடத்தி புலிகள் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள்.

அதாவது விடுதலைப் புலிகள் தாக்குதல், தடுத்தல் பாதுகாத்தல்) (Offensive and Defensive) ஆகிய இரண்டு இராணுவச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வெற்றி கண்டு தமது வலிமையை நிரூபித்து வருகிறார்கள். ஆனால் உருவத்திலும் பலத்திலும் யானையைப் போன்ற இராணுவத்திற்கு இரண்டில் எதிலுமே பூரணமான வெற்றி என்று சொல்வதற்கில்லை. அது மரபு ரீதியான அரசாங்கப் படை என்பதைக் கணக்கில் கொள்ளும் போது இராணுவத்தின் நிலை தோல்வி மருவிய வீழ்ச்சியே.

ஆட்பலம், ஆயுத பலம் என்பனவற்றால் மட்டும் போரில் வெல்ல முடியாது. மனோ பலமும், ஆன்ம பலமும், இலக்கு (இலட்சியம்) நோக்கிய மனதார்ந்த செயற்பாடும், தியாக உணர்வும் சேர்ந்ததால் தான் புலிகள் வெற்றி கண்டு வருகிறார்கள்.

எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதால் சிங்கள அரசையும் படைகளையும் எதிர்த்துப் போராட்டம் நடத்துவது பயன் தராது என்றிருந்த 25 வருடங்களுக்கு முந்திய நிலைமாறி விட்டது. மனோ வலிமையும், தியாகமும், விவேகமும் இருந்தால் எந்தப் பெரிய வல்லரசையும் எதிர் கொள்ளலாம் என்ற புதிய நிலைப்பாட்டுக்குச் செயல் வடிவம் கொடுத்திருக்கிறார்கள் புலிகள்.

ஆகவே இதனை மனதிற் கொண்டு சிங்கள அரசியல் தலைவர்களும், இராணுவத் தளபதிகளும் செயற்படுவது அவர்களுக்கு நன்மை தரும்.

# ஈழ அகதிகள் குறித்து நாளை சென்னையில் பேச்சு

சென்னை, ஏப். 26

புதுடில்லியில் உள்ள ஐ.நா. அகதிகள் தூதராலய தலைமை ஆணையாளர் நாளை சென்னைக்கு விஜயம் செய்கிறார்

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி அப்போது அவர் மாநில அகதிகள் மறுவாழ்வு சிறப்பு ஆணையாளர் சி. எம். இராமதாஸுடன் பேச்சு நடத்த விருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தமிழகத்தில் தங்கி உள்ள 80 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளில் 7 ஆயிரம் பேர் வரையில் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று திரு. இராமதாஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (ஓ )

# கண்காட்சிக்கு நூல்கள் சேகரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 26

உள்ளூராட்சி திணைக்களத்தின் ஆதரவுடன் எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப் படவிருக்கும் கண்காட்சிக்கு, சிறந்த தரமான நூல்கள் பொதுமக்களிடம் ருந்து சேகரிக்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நூல்களை ஒப்படைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் பிரதான நூலகத்தில் (நல்லூர் கிளை) நூல்களை திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் ஒப்படைத்துப் பற்றுச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் —

காட்சி முடிவடைந்ததும் நூல்கள் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது

ஈழத்தின் சமகால நிகழ்வுகளை ஒட்டிய ஆக்கங்கள், மற்றும் கிடைத்தற்கரிய சஞ்சிகைகள், நூல்கள் காட்சியில் இடம்பெறும்.

(ஓ111)

## நல்லூர் இளைஞர் விபத்தில் பலி

திருநெல்வேலி, ஏப். 26

வல்லைவெளியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நல்லூர் மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த இளைஞர் நேற்று முன்தினம் மந்திகை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மோட்டார் சைக்கிளில் செல்லும் போது சில்லில் காற்று போனதால் விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

31 வயதான நல்லை யா அற்புதன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

(ஓ-134)

## இன்று

குருநகர், ஏப். 26

யாழ். திருமறைக் கலாமன்ற கவின் கலைகள் பயிலக மாதாந்த நிகழ்ச்சிகள் இன்று திங்கள் மாலை 6-45 மணிக்கு மன்றக் கலையரங்கில் இடம்பெறும்.

மாதாந்தப் பாடல், இசைக் கலாமணி செல்வி ந ஹேமா யூலியற்றின் வீணைக் கச்சேரி ஆகியன நிகழ்ச்சியில் இடம் பெற இருக்கின்றன.

(ஓ-51)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். மாவட்டப் பாடசாலைகள் இடையே யாழ் கல்வித் திணைக்களம் நடத்தி வரும் மாவட்ட நிலை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

★ 17 வயதுப் பிரிவு:- மட்டுவில் ம. வி எதிர் சாவகச்சேரி டிறிபேர்க்

★ 19 வயதுப் பிரிவு:- சாவகச்சேரி டிறிபேர்க் எதிர் வயாவிளான் ம. ம. வி

o o o

சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நிலை ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கின்றன இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ அளவெட்டி விநாயகர் வி க அணி எதிர் திருநகர் பாரதி வி. க. அணி.

★ குருநகர் சென். றோக்ஸ் வி. க. அணி எதிர் நாவாந்துறை கலைவாணி வி. க. அணி.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான - உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி வி. க. அணி

★ காங்கேசன்துறை யங் றோயல் வி. க. அணி எதிர் கோப்பாய் கோல்ட் ஸ்ரார் வி க அணி. (உ-89)

o o o

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் யாழ் மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

o o o

★ பிற்பகல் 3 மணி:- பற்றீஷியன் (பச்சை) அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

★ மாலை 4 மணி:- ஜொனியன்ஸ் (கறுப்பு) அணி எதிர் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி

o o o

யாழ். நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம யாழ். ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா தேவாலயத்துக்கு முன்னால் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய வி. க. அணியை எதிர்த்து கருணாநிதி வி.க அணி மோதும்.

o o o

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் கோண்டாவில்

( 6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் அனைவரையும் ஒரே தேசிய இனமாக உருவாக்கிய பெருமை தந்தை செல்வாவுக்கே!

தந்தை செல்வாவின் 17 ஆவது அமர தினம் இன்றாகும். அவரது அமரத்துவ தினத்தையொட்டி டாக்டர் ஏ ஜே வில்சன் முன்னர் ஒரு சமயம் ஆற்றிய நினைவுச் சொற்பொழிவின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது இதனைத் தொகுத்து அளித்தவர் சா. ஆ. தருமரத்தினம்.

தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் ஒரு தேசிய இனத்தின் தந்தை. தமிழ் இனத்தின் தந்தை.

போர்த்துக்கேயர் 1618இல் வட இலங்கையிலிருந்து தமிழ் அரசை அழித்தொழித்த பின்னர் தமிழ் தேசிய இனத்துக்கு உயிரூட்டி அதனை மீண்டெழும்ப வைத்தவர் தந்தை செல்வநாயகம்.

பிரித்தானிய ஆட்சியிலும்— இத்தீவு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 1947-ஆம் ஆண்டு முதல் 1956 ஆம் ஆண்டு வரையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும்—

யாழ்ப்பாணத் தமிழர், மன்னார்த் தமிழர், வவுனியாத் தமிழர், திருகோணமலைத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், கொழும்புத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர் என இலங்கைத் தமிழ் மக்கள் பிரிந்து நின்றனர்.

தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் மக்களின் இப் பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, தமிழினம் ஒன்றாகத் திரண்டது. இதன் மூலம் புதிய தேசிய இனம் ஒன்றைத் தந்தை செல்வா நிறுவினார். இத்தேசிய இனம் சிங்களத் தேசிய இனத்திலிருந்து வேறான ஒன்றாகும்.

### சாதனை

தமிழ் தேசிய இனத்தை மீண்டும உருவாக்கியதுதான் தந்தை செல்வாவின் மாபெரும் சாதனை. தமிழ் மக்களின் சமீபகால வரலாற்றில் அபூர்வமிக்க நிகழ்ச்சி இது. இதைச் சாதிப்பது உண்மையிலேயே மிகக் கடினமான காரியமாக இருந்தது அவரது தமிழரசுக் கட்சியால் தமிழ் மக்கள் அனைவரையும் ஒரே தேசிய இனமாக ஒன்றுபடுத்த முடிந்தது

மொழியும், பிரதேசமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்பதை பலருக்கும் தந்தை செல்வா தெளிவுபடுத்தினார்.

தந்தை செல்வா தமது தூரதரிசன நிச்சயத் தன்மை காரணமாகத் தாம் முன் வைத்த காலை பின் வைக்காதவர்.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை போன்ற இடைக்கால உடன்படிக்கைகள் இருக்கலாம். ஆனால் அத்தகைய ஏற்பாடு தானும் இலட்சிய பூமியை நோக்கிய நீண்ட பயணத்தில் மைல்கல்லே தவிர வேறல்ல. தங்குமடமாகத்தானும் அதனை அவர் எடுத்துக் கொண்டாரில்லை. 1965இல் டட்லிசேனநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கையும் அப்படியானதே தமது குறிக்கோளில் இருந்து இம்மியும் திசை மாறாதவர் தந்தை செல்வா.

### போலந்து உதாரணம்

சிங்களக் குடியேற்றத்தினால் தமிழர் பூமி அழிந்து போகும் ஆபத்துக குறித்து எச்சரித்து. அந்த அழிவில் இருந்து காப்பாற்ற அவரால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் அவருக்கே உரிய தனித்துவமான முத்திரையாக வெளிப்பட்டது.

மூன்று சந்தர்ப்பங்களில் போலந்து நாட்டின் பெரும் பகுதிகளை அந்நாட்டின் அயல்நாட்டினர் அபகரித்திருந்தனர். மூன்றாவது தடவையில் போலந்து நாடே ஐரோப்பாவின் தேசப் படத்திலிருந்து அழிக்கப்பட்டு விட்டது. ஆயினும் முதலாவது உலக யுத்தத்தின் பின்னர் அந்த நாடு இறைமையுள்ள ஓர் அரசாக மீள்வித்துப் புதுப்பிக்கப்பட்டு இன்றுவரை உயிர் வாழ்கின்றது என்று உரைத்த தந்தை செல்வா தமிழீழம் குறித்து ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும் என்று எதிர்க்கேள்வி விடுத்திருந்தார்.

தந்தை செல்வாவைத் தமிழ் தேசிய இயக்கத்தினுள் இழுத்துப் போட்டவர் பிரபல கொழும்பு வழக்கறிஞராகிய திரு. எஸ் சிவசுப்பிரமணியம் ஆவார். (காலஞ்சென்ற கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. கதிரவேற்பிள்ளையின் தந்தையார்) தண்டவாளத்தில் ஏற்றப்பட்ட ரயில் குறிக்கோளை நோக்கி விரைந்தது பிற சிந்தனையை மறந்தது திரும்பிப் பார்த்ததில்லை; பிற்பக்கம் சென்றதில்லை; பின் திசையில் ஓடவில்லை; ஓட்டம் நிற்கவில்லை; வேகம் குறையவில்லை; திசை விலகவில்லை; ஒரே ஓட்டம் ஒரே குறிக்கோள்.

தந்தை செல்வா தாம் தரிசனமாகக் கண்ட தமிழீழ குறிக்கோளை நோக்கிய தமது விடுதலைப் பயணத்தில் தமது குறிக்கோளைச் சமீபித்திருந்தும் அதனை அடைவதற்கு முன்பாகவே எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். தமிழீழ விடுதலையை நோக்கிய அந்தப் பந்தய ஓட்டத்தில் வெற்றிக் கம்பத்தை அவரால் தாண்ட முடியாவிடினும் கூட, தமக்குப் பின் தமது இனம் அரும்பெரும் வீரர்களைப் பெறும் என்ற தமது உறுதியை அவர் நிலை நாட்டி விட்டார் தந்தை செல்வாவின் தரிசனத்தை — தமிழீழத்தை நனவாக்குவது தமிழ்க் குலத்தின் கடப்பாடாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா சச்சிதானந்தம்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிராசா சச்சிதானந்தம் 10-04-1993 இல் கொழும்பில் காலமானார்.

இவர் தவபாக்கியத்தின் அன்புக் கணவரும், மனோகரி, குகானந்தன், காலஞ்சென்ற ஈசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவபுத்திரள் திலகவதி, அரசகேசரி, கமலநாதன், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 12-04-1993 அன்று கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. கமலாதேவி,
(சகோதரி).

உபதபாற் கந்தோர் வீடு,
மல்லாகம்.
(5897)

## குன்சன் சின்னப்பு

கோப்பாய் வடக்கு, புனித சூசையப்பர் கோவிலடியைச் சேர்ந்த குன்சன் சின்னப்பு காலமானார்

இவர் நேசம்மாவின் அன்புக் கணவரும், மேரிலீலா, அரியமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் சூசைமுத்து (நீர்ப்பாசன இலாகா - வவுனிக்குளம்), ஜெயரட்ணம் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புனித சூசையப்பர் சேமக்காலையில் இன்று (26-04-1993) காலை 11-00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சூசைமுத்து
(மருமகன்)

கோப்பாய் வடக்கு.
(25405)

## விநாயகர் வைத்திலிங்கம்

(முன்னாள் புகையிரத திணைக்களம், காங்கேசன்துறை)

காங்கேசன்துறை புதுவீட்டு ஒழுங்கையை சேர்ந்த விநாயகர் வைத்திலிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அவுசேகமணியின் அன்புக் கணவரும், அருந்தவராசா (வலி வடக்கு பிரதேசசபை உப-அலுவலகம், காங்கேசன்துறை) வின் தகப்பனாரும், காலஞ்சென்ற செல்லத்துரை, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலாரஞ்சினியின் மாமனாரும், தனுஜா, சிந்துஜா, இந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 26-4-93 பி. ப 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருந்தவராசா
(மகன்)

அரசடி வீதி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
(25404)

## மட்டக்களப்பில் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதங்களும் ஏற்படவில்லை என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலின் போது படையினரிடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரீ 56 துப்பாக்கி — 04
- ★ அவற்றுக்குரிய மகஸீன்கள் — 16
- ★ நடுத்தர ரவைகள் —324
- ★ ஜே. ஆர். கிரனேட்—01
- ★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
- ★ ஏ. கே. ஹோல்சர் —04
- ★ தலைக் கவசம் — 02

(உ-5)

## விளையாட்டு ..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

மெய்வல்லுநர் போட்டிகள் மே மாதம் 7 ஆம் திகதி நடைபெறும். (உ-143)

o o o

வடமராட்சி வலயத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சங்கத்தில் இணைவது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்றை, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 மணிக்கு லீக் பணி மனையில் நடத்தவுள்ளது.

லீக்கில் தற்போது இணைந்துள்ள கழகங்களினதும், இனிமேல் இணையவிரும்பும் கழகங்களினதும் தலைவர்கள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)

o o o

அரியாலை சனசமூக நிலையம் 44 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி வடமாகாண ரீதியில் விலகல் முறையிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

கிரிக்கெட் 6பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 6 ஓவர்கள் ஆட்டம்), கரப்பந்தாட்டம் (6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான "ஓவர்" ஆட்டம்), வலைப்பந்தாட்டம், 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம் (லீக்கில் பதிவு செய்து கொள்ளாத கழகங்களுக்கானவை) ஆகிய விளையாட்டுக்களே நடத்தப்படவுள்ளன இப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் நாளை ஆகும்.

## ஆலயங்களில்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். (த-100)

o o o

ஆனைக்கோட்டை உயரப்புலம் அருள்மிகு உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கள் பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்

உற்சவ நாட்களில் மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை திரு. ஆறு. திருமுருகன் பெரிய புராணத் தொடர் விரிவுரை நிகழ்த்துவார்.

o o o

மந்திகை, ஏப் 26

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் நடைபெறும். (உ-87)

## நாளை

ஊரெழு அம்மன் கோயில் முன்றிலில் நாளை செவ்வாய் காலை 9-30 மணிக்கு உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள் ஆரம்பமாகி நடைபெறும்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக ஏற்பாட்டில் துலா, பட்டை மூலம் நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனைமரம் ஏறுதல், குட்டான் இளைத்தல் கிடுகு பின்னுதல், உணவுப் பண்டங்கள் தயாரித்தல் போன்ற போட்டிகள் நடைபெறும். (ஒ-45)

o o o

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நாளை செவ்வாய் காலை 10-00 மணிக்கு மேதினம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கின்றது. கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தாய்ச் சங்க நிர்வாகிகள், யாழ் மாவட்ட நிர்வாகிகள், சகல கிளைகளின் தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ)

# மரண அறிவித்தல்

## முருகேசு மகேஸ்வரி

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாக கொண்ட முருகேசு மகேஸ்வரி 25-04-93 ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் நா. அ முருகேசு (முன்னைநாள் வர்த்தகர் தங்கொட்டுவ) அவர்களின் அருமை மனைவியும், மகாதேவன், பரமேஸ்வரன் (சிவனி), கனகசுந்தரம் (பிரான்ஸ்), ஆகியோரின் அருமைத் தாயாரும், கோமதி, சாந்தினி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், சிறிகாந்தன், விஜிதா, சித்திரா ஆகியோரின் அன்புப் பாட்டியும், பராசக்தி, சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரியும், நடராசா, கந்தசாமி, காலஞ்சென்ற N. A. கந்தையா (முன்னைநாள் வர்த்தகர் தங்கொட்டுவ) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஐ. கதிரவேலு (சிறாப்பர்), சரஸ்வதி, மகேந்திரன் (லிகிதர்), லலிதாம்பிகை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26-04-93) காலை 10 மணிக்கு அன்னாரின் தற்போதைய கல்லூரி வீதி வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
N A. முருகேசு (கணவன்)
சிவனி (மகன்)

யாழ்ப்பாணக் கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(25406)

இசையிலே இனிமை! முற்றிலும் புதுமை!

கண்டு களியுங்கள்

★ திருமறைக் கலாமன்றம் ★

பெருமையோடு வழங்கும்

"சத்திய வேள்வி"

(அரிச்சந்திர மயான காண்டம்)

இசை நாடகம்

காலம்:
30-04-93—வெள்ளி
02-05-93—ஞாயிறு
03-05-93—திங்கள்

தினமும் மாலை 6.45 மணி

இடம்:- மன்ற அரங்கு பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சி/5051) ★ ஆசனப்பதிவு செய்து கொள்ளலாம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26-04-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org